1990 ஏப்ரல் 24]

திரு. கே. ஆர். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய ரேஷன் கார்டுகள் வழங்குவதில் அரசு இப்போது புதிதாக ஒரு உத்தரவைப் பிறப்பித்திருப்பதாக அறிகிறேன். புதிய கார்டுகள் வழங்கப்படுவதற்கு முன்பாக அந்தப் பகுதியில் 10 பழைய கார்டுகளைத் திரும்பப் பெற்றால், 5 கார்டுகள்தான் வழங்கப்படுவதாக அறிகிறேன். அதை அரசு மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

9—50 மணி

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது நிர்வாக அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட அறிவுரை. அதைப்பற்றி தாங்கள் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை. உங்கள் தொகுதியில் உள்ளவர்கள் யாருக்காவது குடும்ப அட்டை தேவைப்படுமானால் உரிய அதிகாரிகளிடம் சென்று மனு அளித்து, விவரங்களைச் சொல்லி புதிய அட்டைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

மாவட்டக் கூட்டுறவு வங்கி அமைத்தல்

* 2160—திரு. என். பெரியசாமி :
மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சிதம்பரனார் மாவட்டத்தில் மாவட்டக் கூட்டுறவு வங்கி அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. பொன் முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

திரு. என். பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்திலிருந்து வ.உ.சி. மாவட்டம் பிரிக்கப்பட்டு நான்காண்டுகளாகியும், இதுவரைக்கும் அங்கே மத்திய கூட்டுறவு வங்கி அமைக்கப்படாமல் இருக்கிறது. அதை அமைக்க உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன் முத்துராமலிங்கம் : நெல்லை கட்டபொம்மன் மாவட்டத்திலே உள்ள மத்திய வங்கி நலிந்த வங்கியாக தேசிய வேளாண்மை ஊரக வளர்ச்சித்துறை வங்கியால் கருதப்பட்டு, இப்போது புனர் அமைப்புத் திட்டத்தின் கீழ் இருந்துகொண்டிருக்கிறது. இந்தக் கால கட்டத்தில் அதை இரண்டாகப் பிரித்து தூத்துக்குடியை தலைநகராகக் கொண்ட

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வ.உ.சி. மாவட்டத்தில் புதிய மத்திய வங்கியொன்றை உருவாக்குவது என்பது இயலாத ஒன்று என்பது இந்திய தலைமை வங்கியின் கருத்து. இப்போது புனர் அமைப்புத் திட்டத்தின் அடிப்படையில் நெல்லை-கட்டபொம்மன் மாவட்டத்திலே இயங்கிக் கொண்டிருக்கிற மத்திய வங்கி, நிதிநிலைமையில் சீரடைந்த பின்னரே, தூத்துக்குடியைத் தலைநகராகக் கொண்ட வ.உ.சி. மாவட்டத்தில் புதிய மத்திய கூட்டுறவு வங்கி தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நெல் கொள்முதல் நிலையத்திற்குச் சொந்தக் கட்டிடம்

* *3078*—திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், பழைய கூடலூர் கிராமத்தில் இயங்கி வரும் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்குச் சொந்தக் கட்டிடம் கட்டுவதற்கான பரிந்துரை அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. பொன் முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினாவில் குறிப்பிட்டுள்ள அரசு நெல் கொள்முதல் நிலையம், மயிலாடுதுறை வட்டத்தில் அதிகமாக நெல் கொள்முதல் செய்யப்படுகிற இடமாகும். அங்கு அரசு நேரடிக் கொள்முதல் நிலையக் கட்டிடம் கட்ட இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இப்போது ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சொந்தக் கட்டிடம் கட்ட பரிந்துரை இல்லையென்றாலும், எட்டாவது ஐந்தாண்டுத் திட்டிடத்திலாவது அதைச் சேர்த்து அவசியமான அந்தக் கட்டிடத்தைக் கட்டுவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன் முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 7-வது திட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 50 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் 35 நிலையங்கள் கட்டி முடிக்கப்பட்டு, இன்னும் 15 நேரடி